# திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி

ந.க.எண் : 345 / 2021/அ1 நாள் : 17.05.2022

## இரு உறையிட்ட ஒப்பந்தப்புள்ளி
## ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

முத்துப்பேட்டை தேர்வு நிலை பேரூராட்சியில் 2021–2022 ம் ஆண்டு **தூய்மை இந்தியா இயக்கம் 2.0 – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2021–22**ன் கீழ், மேற்கொள்ள வேண்டிய வேலைகள் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் எதிர் வரும் 2022 ம் ஆண்டு **மே மாதம் 31 ம்** நாள் (31.05.2022) செவ்வாய்கிழமை மாலை 3.00 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்க்கண்டவாறு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | Date and time of Pre bid meeting | **24.05.2022 AT 3.00 PM** |
| 2 | Last date and time for downloading bid documents | **31.05.2022 AT 3.00 PM** |
| 3 | Date of Tender | **31.05.2022** |
| 4 | Last Date and time for submission of bid document, including online submission | **31.05.2022 AT 3.00 PM** |
| 5 | Date and time of opening of the Technical Bid | **31.05.2022 AT 3.30 PM** |
| 6 | Technical Bid Evaluation | **02.06.2022** |
| 7 | Price Bid Opening | **06.06.2022** |
| 8 | Work Order | **15.06.2022** |

**பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 31.05.2022ம் தேதி மாலை 3.00 மணி வரை வலைதளத்தில் பதிவிறக்கம் (https://tntenders.gov.in / http://www.tenders.tn.gov.in) இலவசமாக செய்து கொள்ளலாம்.**

### தூய்மை இந்தியா இயக்கம் 2.0 – திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2021–22

| வ. எண் | பணிகள் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | டெண்டர் டெபாசிட் | டெண்டர் ஷெட்யூல் | வேலையின் கால அளவு |
|---|---|---|---|---|---|
| 1. | புல எண்.219 மற்றும் கிழக்கு கடற்கறை புறவழிச் சாலையில் தேங்கியுள்ள பழைய கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் நிலங்களை மீட்டெடுத்தல் | 52.04 | 52040 | 15000+ 1800 | 180 நாட்கள் |

## நிபந்தனைகள்

1. முத்துப்பேட்டை தேர்வு நிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்கள் அரசு விதிமுறைகளின்படி 2022–23 ம் ஆண்டிற்கு தங்களது ஒப்பந்தகாரர் பதிவை புதுப்பித்துக் கொண்டவர்களுக்கு மட்டுமே ஒப்பந்த படிவங்கள் வழங்கப்படும்.
2. முத்துப்பேட்டை தேர்வு நிலை பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்கள் வழங்கப்பட்டுள்ள சால்வன்சி 1.1.2022 க்கு பிறகு பெறப்பட்டதாக இருக்க வேண்டும் அல்லது கொடுத்துள்ள சால்வன்சிக்கு 1.1.2022 க்கு பிறகு சார்பதிவகத்தில் இ.சி பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

3. டெண்டர் ஷெட்யூல்கள் அனைத்தையும் மூடி முத்திரையிட்டு உறையின் மேல் பெயர் பெறுபவர் மற்றும் கொடுப்பவர் ஆகியோரின் முழு முகவரி தெளிவாக எழுதப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத உறைகள் பிரிக்கப்பட மாட்டாது.
4. டெண்டருடன் அவ்வேலைக்கான முன் வைப்புத் தொகையை பேரூராட்சியில் செலுத்தியதற்கான ரசீது இணைக்கப்பட வேண்டும். டேவணித்தொகை செலுத்தப்படாத டெண்டர்கள் பரிசீலனைக்கு எக்காரணமும் கொண்டு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
5. டெண்டர் படிவங்களில் அடித்தல், திருத்தல் ஏதும் இருக்கக்கூடாது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அதற்கு ஒப்பந்தகாரரால் கையொப்பமிடப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
6. வரப்பெறும் டெண்டர்களை பரிசீலனைக்காக பிரிக்கும் போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு நிர்வாக அதிகாரியின் தீர்ப்பே முடிவானதாகும். எந்த டெண்டரையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்கவும் ஒப்புக்கொள்ளவும் செயல் அலுவலருக்கும், பேரூராட்சி மன்றத்திற்கும் முழு உரிமையுண்டு.
7. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும். எந்த வித டெண்டரையும் ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ மன்றத்திற்கு முழு அதிகாரம் உண்டு.
8. ஒப்புக்கொள்ளப்படாத மற்றும் வேலை கிடைக்கப்பெறாத ஒப்பந்தகாரர்களுடைய டெண்டர் டேவணித் தொகை மன்றத்தின் பரிசீலனைக்குப் பிறகு காசோலையாக வழங்கப்படும்.
9. ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்த புள்ளி கொடுத்த ஒப்பந்தகாரர் வேலை உத்திரவு (Work order) கிடைத்தவுடன் ரூ.20/–க்கு குறையாத முத்திரைத் தாளில் முச்சலிக்கா ஒப்பந்த படிவத்தில் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
10. வேலைக்காக ஒப்பந்தகாரர் சேகரம் செய்யும் பொருட்கள் மதிப்பீடு மற்றும் ஒப்பந்த படிவம் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள அளவு கணக்கு எண்ணிக்கை அளவின் படி (சைஸ்) இருக்க வேண்டும். அவ்வாறு செய்யாத சேகரங்களை நிராகரிக்க பேரூராட்சிக்கு உரிமையுண்டு.
11. ஒப்பந்தகாரர் உரிய காலக்கெடுவிற்குள் வேலையை செய்து முடிக்கத் தவறினால் தாங்கள் செலுத்தியுள்ள டேவணி தொகை பறிமுதல் செய்து வேலை உத்திரவு (Work order) ரத்து செய்யப்படும். மாற்று ஏற்பாட்டின் மூலம் வேலைகளை நிறைவேற்றுவதால் ஏற்படும் இழப்பிற்கு அவரே முழுப் பொறுப்பாக்கப்படுவதுடன், அபராதம் விதித்து தொகை வசூலிக்கப்படும்.
12. ஒப்பந்தகாரர் செலுத்தி இருக்கும் டேவணித் தொகையானது ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்பட்டு அந்நிதியாண்டிற்கான தணிக்கை அறிக்கை கிடைக்கப் பெற்று தணிக்கை அறிக்கையில் தடைகள் ஏதும் எழுப்பப்பட்டிருக்கமாயின் தடையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை தங்கள் செலுத்தியுள்ள டேவணி தொகையிலிருந்து பிடித்தம் செய்தது போக மீதித்தொகை காசோலை மூலம் வழங்கப்படும்.
13. ஒப்பந்தகாரர் பேரூராட்சியில் திட்டப்பணி மேற்கொள்ளுவதால், தணிக்கையின் முடிவிற்கு கட்டுப்பட்டவராவார்.
14. டெண்டர் வேலைக்கான ஷெட்யூல் படிவம் பேரூராட்சி அலுவலகத்தில் அட்டவணையில் கண்டுள்ள தொகைகளை செலுத்தி 30.05.2022 பிற்பகல் 3.00 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.
15. பணி முடிந்து பட்டியல் தொகை பெறப்படும் நிலையில் பட்டியல் தொகைக்கான GST மற்றும் வருமான வரி தொகை முழுவதும் செலுத்தப்பட்டு செலான் நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

16. பகுதி பட்டியலுக்கு கண்டிப்பாக தொகை பட்டுவாடா செய்யப்பட மாட்டாது. வேலை முழுவதும் முடிந்த பிறகே பட்டியல் தொகை ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும்.
17. இவ்வேலைக்கு செயல் அலுவலர் நிர்ணயம் செய்யும் இடங்களில் பணி செய்து முடிக்கப்பட வேண்டும். ஒப்பந்தகாரர் தன்னிச்சையாக செயல் அலுவலர் நிர்ணயிக்காத இடங்களில் பணி மேற்கொள்ளக் கூடாது. அவ்வாறு செய்யும் வேலைக்கு தொகை வழங்கப்பட மாட்டாது.
18. பணி நடைபெறும் இடத்தில் திட்டத்திற்கான விளம்பரம் குறித்து பணி மேற்கொள்ளப்படும் ஒப்பததரார் செலவில் விளம்பரப் பலகை எழுதி வைக்கப்பட வேண்டும்.
19. இப்பணி தொடங்கும் நிலையிலிருந்து பணி முடியும் நிலை முடிய ஆகிய மூன்று நிலையில் A4 அளவில் தெளிவான நிலையில் புகைப்படத்துடன் சமர்பிக்கப்பட வேண்டும்
20. ஒப்பந்தகாரர் வணிகவரி துறை பதிவு செய்யப்பட்டவராக இருக்க வேண்டும்.
21. பட்டியல் தொகையில் வருமான வரி, வருமான வரிக்குரிய மேல் வரி, GST வரி மற்றும் கட்டிட தொழிலாளர் வாரிய நலநிதி ஆகிய பிடித்தம் செய்தது போக மீதத் தொகைக்கு காசோலை மூலம் வழங்கப்படும்.
22. ஒப்பந்தப்புள்ளிகள் சம்மந்தமான விவரங்களை அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**ஒப்பந்தப்புள்ளி படிவங்களை https://tntenders.gov.in, http://www.tenders.tn.gov.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

**(ஒம்) திருமதி. ந. மும்தாஜ் பேகம்,**
**தலைவர்,**
**முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி,**
**திருவாரூர் மண்டலம்.**

**செயல் அலுவலர்,**
**தேர்வுநிலை பேரூராட்சி,**
**முத்துப்பேட்டை**
**திருவாரூர் மாவட்டம்.**

**பெறுநர் :**

பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள் அனைவருக்கும்.

**நகல் :**

1. தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குனர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் உதவி இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர்.
3. இளநிலை பொறியாளர், பேரூராட்சிகள் தொகுப்பு, முத்துப்பேட்டை
4. அலுவலக விளம்பர பலகைக்கு.
5. உள்ளூர் மற்றும் வெளியூர் அலுவலகங்களுக்கு விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரபடுத்தலுக்காக.